DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 19/2024**

**Deposition of LW4 examined as PW4**

Dt. 09.02.2026

| | |
|---|---|
| Name | ராகிராஜ் |
| Husband's Name | சுஜித் |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 35/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 09.02.2026

(Accused absent. U/s. 355 of BNSS petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை ரயில்வே நிலையத்தில் CCTC ஆக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. கடந்த 08.10.2023ம் தேதி காலை 5.55 மணியளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில்நிலையத்தில நான் பணியில் இருந்த போது போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக என்று எனக்கு தெரியாது. தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **அவை முறையே அ.சா.ஆ2 மற்றும் அ.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடன் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் பாயிண்ட்ஸ் மேனாக பணிபுரிந்து வந்தார். கடந்த 08.10.2023 ம் தேதி காலை 5.55 மணி அளவில் வைத்தீஸ்வரன் கோவில் ரயில் நிலையத்தில் நான் பணியில் இருந்த போது அசா.1க்கும் எதிரியிக்கும் இடையே நடந்த தகராறு பற்றி விசாரித்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகசரின் சாட்சியாக கையொப்பம் செயததாகவும் பின்னர் என் முன்னிலையில் எதிரி ராஜசேகரனிடம் இருந்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து அரிவாளை கைப்பற்றியதாகவும், அதில் சாட்சியாக கைபயொப்பமிட்டதாகவும் கூறிவிட்டு தற்போது அ.சா.1 எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியால் அவரை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

09/02/2026

9/2/26

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

09/02/2026

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

9/2/26

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை